

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.12.2025) முகாம் அலுவலகத்தில், இலங்கை அரசின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சந்தித்து, ‘டித்வா’ புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் மக்களுக்கு உதவிடும் வகையில் நிவாரணப் பொருட்களை தமிழ்நாடு அரசு வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இலங்கை நாட்டு துணைத் தூதர் டாக்டர் கணேசநாதன் கீதீஸ்வரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.12.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளி பகுதிநேர ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜலீல் முகைதீன், தமிழ்நாடு என்.எச்.எம். பணியாளர்கள் கூட்டமைப்பின் மாற்றுத்திறனாளிகள் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் ஆ. பகவதிக்குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மாற்றுத்திறனாளிகள் ஊழியர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் பஹாத் முகம்மது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில்

# துறைமுகம் தொகுதியில் கிறிஸ்துமஸ் பெருவிழா 2025!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்து 3000 கிறிஸ்துவ சகோதர குடும்பங்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்!

சென்னை, டிச.20-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கேசேகர்பாபு ஏற்பாட்டில் நாளை (21.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை, பிராட்வே, தொன் பாஸ்கோ பள்ளி வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், டான்பாஸ்கோ பள்ளி ரெக்டார் (ம) தாளாளர் அருட்தந்தை ஜோஆண்ட்ரூ ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா 2025-ஐ, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று 3000 கிறிஸ்துவ சகோதர குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இந்த இனிய விழாவில் முன்னாள் சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சிஎஸ்ஐ. சென்னை பேராயம் கௌரவச் செயலாளர் அருள் பணி அகஸ்டின் பிரேம் ராஜ் சி.எஸ்.ஐ சென்னை பேராயம், துணை தலைவர் அருள்பணி ஜெயசீலன் ஞானாதிக்கம், பங்கு தந்தை சவேரியார் ஆலயம் அருட்திரு. சுந்தர் ராஜ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், இ. பரந்தாமன், ப.ரங்கநாதன், கே.எஸ் ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, சி. மகேஷ்குமார், கே.சந்துரு, தமிழன் பிரசன்னா, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, கூ.பீ.ஜெயின். எம்.சி, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்சி, ஆர்.வரதன்,

பகுதி கழகச் செயலாளர்கள்: எஸ் ராஜசேகர், எஸ்.முரளி, இசட்.ஆசாத், ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, ரஞ்சித் விஜயன், பி.விஜயகுமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார் எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே. பா.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2025) பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே. சேகர்பாபு, சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றி அழகன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.


